

திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைப்படி சென்னீர்குப்பத்தில் நடைபெற்றது இதில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது அண்ணா பிறந்தநாள் முன்னிட்டு வாக்குச்சாவடிகளிலும் கூட்டங்கள் நடத்தி உறுதிமொழி ஏற்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் உடன் நிர்வாகிகள் வி.குமார், அண்ணாமலை, ஏ.ஜனார்த்தன், ஏ.ஆர்.பாஸ்கர், சுமதி குமார், எஸ்.புகழேந்தி, வி.பி.பிரகாஷ், க.பரிமேலழகன், டி.குமரேசன், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, திருமலை ராஜ், மு.ராஜாராம், எஸ்.சதீஷ்குமார், சுகுமாரன்,திருலோகா சுந்தர், சுமதி அத்தியகிரி, பாவனி, ந.ச.பாலா, ஞானமூர்த்தி, பாபு, லிங்கேஷ்குமார், உள்பட கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளனர் .

# பேரறிஞர் அண்ணா 117-வது பிறந்த நாள் இன்று!

## திருவுருவச் சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, செப். 15 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு, 15.9.2025 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள அவர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் நடராஜர் - பங்காரு அம்மாள் தம்பதியினருக்கு 15.9.1909 அன்று மகனாகப் பிறந்தார். எளிய குடும்பத்தில் பிறந்து சிறந்த மாணவராகவும், எழுத்தாளராகவும், ஆற்றல் மிக்க பேச்சாளராகவும், பண்பட்ட அரசியல் வாதியாகவும், உத்தமத் தலைவராகவும் திகழ்ந்தார். தமது சிறந்த பேச்சாற்றல் மூலம் மக்களிடையே அறிவுப் புரட்சியை ஏற்படுத்தினார். “கடமை, கண்ணியம், கட்டுப்பாடு” என்கின்ற கோட்பாட்டை மக்களிடையே விதைத்தார். மாற்றாரையும் மதிக்கக் கற்றுத்தந்த மாபெரும் தலைவர் ஆவார்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களைத் தம் தலைவராகக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் ஏழை, எளிய மக்கள் முன்னேற்றம் அடையும் வகையில் சிறப்பான பல திட்டங்களை வழங்கினார். தாய் மொழி மீது கொண்ட அளவற்ற பற்றின் காரணமாக, ”சென்னை மாகாணம்” என்று அழைக்கப்பட்டு வந்ததை “தமிழ்நாடு” எனப் பெயர் மாற்றம் செய்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இந்தியாவிலேயே முதன் முதலாக அரசுப் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. கல்வியில் தமிழுக்கு முதலிடம் வழங்கினார். 1967ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள், சென்னை புனித ஜார்ஜ் கோட்டை என்ற பெயரை ’தமிழ்நாடு அரசு - தலைமைச் செயலகம்’ என மாற்றம் செய்தார். 1968ஆம் ஆண்டு சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற தத்துவத்தை வழங்கி தமிழ்நாடு முன்னேற சிறப்புடன் செயல்பட்டார்.

தமிழ்நாடு அரசின் முத்திரையான கோபுரச் சின்னத்தில் இருந்த ‘கவர்மெண்ட் ஆஃப் மெட்ராஸ்’ என்ற ஆங்கில வாக்கியத்தை நீக்கிவிட்டு, “தமிழ்நாடு அரசு” என மாற்றினார். தமிழ்நாடு அரசு பயன்படுத்தும், அரசு முத்திரையில் “சத்ய மேவ ஜெயதே” என்ற வடமொழித் தொடரை அகற்றி “வாய்மையே வெல்லும்” என்ற சொல்லை இடம் பெறச் செய்தார். “ஏழையின் சிரிப்பில், இறைவனைக் காண்போம்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தும், மறையாமல் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவினை நனவாக்கிடும் வகையில், கிராமங்கள் புத்துணர்வு பெற அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா நினைவிடம், மற்றும் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகியவற்றை அமைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு, 26.2.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டு கொண்டாடப்படும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாள் நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன், துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் களாம்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட கிளைக் கழகங்களின் செயற்குழு கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் எஸ். மகாலிங்கம் ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாவட்ட செயலாளரும், திருத்தணி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினருமான திருத்தணி எஸ். சந்திரன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினரும்,திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. இராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஒருங்கிணைந்து செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் க.திராவிடபக்தன், மாவட்ட துணை செயலாளர் சி. ஜெயபாரதி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் களாம்பாக்கம் எம். பன்னீர்செல்வம், வி. எஸ். நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் ஜி. ரமேஷ், ஏ.பி. செந்தில்குமார், நீலாவதி சீனிவாசன், வழக்கறிஞர் டி.தினகரன், மூர்த்தி முனிகிருஷ்ணன், கிளைக் கழக செயலாளர்கள் செல்வம், பிரகாஷ் உள்ளிட்ட ஒன்றிய கழக பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் பங்கேற்றனர். ←





→ பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்தநாள் முன்னிட்டு அம்பத்தூர் பகுதி, 80 வது வட்டத்திற்குட்பட்ட 29 பாகங்களில் உறுதிமொழி ஏற்க தலைமை செயற்குழு உறுப்பினரும், அம்பத்தூர் 7 வது மண்டலக் குழுத் தலைவருமான வழக்கறிஞர் பி.கே.மூர்த்தி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் வட்டக் கழகச் செயலாளர் ராதா கிருஷ்ணன் மற்றும் வடடக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக நிலை முகவர்கள், அணிகளை சார்ந்த கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

முப்பெரும் விழா தொடங்குவதற்கு முன்னதாக, பெரியாரின் 147வது பிறந்தநாளை முன்னிட்டு பிளானோ (Plano) நகரில் உள்ள ஆர்பர் ஹில்ஸ் நேச்சர் பிரசர்வ் (Arbor Hills Nature Preserve) பகுதியில் பெரியார் ஓட்டம்/நடை (Periyar Run/Walk) நடைபெற்றது. நிகழ்வுக்கான ஏற்பாடுகளை அமெரிக்க அயலக தி.மு.க. தெற்கு மண்டலத்தின் அமைப்பாளர் டெக்சாஸ் பாண்டிமதி மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆனந்த் பழனிசாமி, ராம்குமார், சரவணகுமார் ஆகியோர் மிகச் சிறப்பாக செய்திருந்தனர். இவர்களைப் போன்ற புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழகத்தின் பெருமைகளையும், தி.மு.க.வின் கொள்கைகளையும் உலகம் முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்டிருப்பது பாராட்டத்தக்கது. ←



# அண்ணாவும் ஆங்கிலமும்!



பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட தி.மு.கழகம் பவள விழாவை நிறைவு ஆண்டை எட்டியுள்ளது. அண்ணா, பெரியார் பிறந்தநாள் மற்றும் கழகம் தோற்றுவித்த நாள் ஆகிய முப்பெரும் விழா கரூரில் செப்டம்பர் 17ஆம் தேதி தமிழ்நாடு முதல்வரும் திமுகவின் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பேரறிஞர் பெர்னாட்ஷா, உலக நாடுகளில் செயல்படும் தலைவர்கள் குறித்து வரிசைப்படுத்துவார். *Popular leader * Proper leader, * Paper leader, * Pen leader, * * Political leader * Poper leader *and Practical leader என்று “P”- யில் தொடங்கும் தலைவர்கள் பற்றிய வரிசை சொல்லுவார். இவற்றில் ஏதாவது ஒரு தலைப்பில் தான் உலகில் தலைவர்கள் இருப்பார்கள் என்பார். ஆனால், பேரறிஞர் அண்ணா, இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றவராக இருந்தார்.

தென்னாட்டுக் காந்தி, இந்நாட்டு இங்கர்சால், காஞ்சி தந்த கரிபாலிட்டி, திராவிடத்துப் பெர்னாட்ஷா என்று ஆன்றோர், சான்றோர் அனைத்துப் பெருமக்களாலும் அடைமொழியிட்டு அன்போடு அழைக்கப்பட்டவர் தாம் பேரறிஞர் அண்ணா! அவர் அறிவுப் புரட்சியைத் தோற்றுவித்த அரசியல் வல்லுநர்! தண்டமிழ் கொஞ்சும் தலைசிறந்த தன்னேரிலாச் சொற்பொழிவாளர்! அவர் தமிழ்ப் பேச்சிலும், எழுத்திலும் இருள் விளக்கி, ஒளி படைத்த கண்களாகப்போற்றியவராய், மாபெரும் மறுமலர்ச்சிக் காலத்தை உண்டாக்கிய ஓர் உன்னத விற்பன்னர்! உலக அரசியலில் வியக்கத் தக்க தோர் அதிசய மாமேதை! அழகான உவமைகள், உருவகங்கள், எடுத்துக்காட்டுக் கதைகள் எனத் தெள்ளு தமிழ் நடையில், தெளிதேன் சுவையில் அமுதம் என அள்ளி, அள்ளி மொண்டு பருகிடத் தந்த பாவேந்தர்! எதிரிகளையும் வீழ்த்தும் ஏந்தலாக நின்று, ஏழை எளிய மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டவர்!அழகு தமிழால் அடுக்குச்சொல் பேசி மயக்கியவர்! அகிலத்தார் அனைவரையும் அடர்த்தி மிகு ஆங்கிலத்திலும் அசத்தியவர்! அவரது வசீகரிக்கும் வார்த்தை வளத்தால், ஆட்கொள்ளும் ஆங்கில மொழி நடை வல்லுனர்!

தமிழில் சொற்பொழிவு நிகழ்த்தக் கூடிய வல்லவர்களுக்கு, ஆங்கிலத்தில் அத்துணைச் சிறப்பாகப் பேச அமைவதில்லை. அதுபோன்று ஆங்கிலத்தில் இலக்கண வளத்துடன் அழகுடன் உரையாற்ற வல்லவர்களுக்குத் தமிழில் பேச வராது; ஆனால், அண்ணாவோ ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் அழகும், ஆற்றலும் ஒளிரப் பெற்றவர். அண்ணாவுக்கு முன்னர் எந்த ஒருவருடைய சொற்பொழிவும் உடனே நூல் வடிவம் பெற்று வந்ததில்லை. 80 ஆண்டுகளுக்கு முன்னரே, அண்ணாவின் சொற்பொழிவுகள் நூல் வடிவத்தில் தமிழகத்தில் முதன் முதல் மக்களிடையே பெரும் எண்ணிக்கையாகி விற்பனையாயிற்று.

“அண்ணாதுரை அவர்களின் ஆங்கிலப் பேச்சில் என்னை மறந்தேன், அற்புதமான பேச்சு: அமெரிக்காவில் இவர் பிறந்திருந்தால்,உலகப் புகழ்பெற்று இருப்பார்! இவர் ஆங்கிலப் பேச்சில் எனது வழித்தோன்றலாக, வாரிசாகவே, கருதுகிறேன். வருகிறேன்” என்று கூறினார் ஆங்கிலத்தில் மிகச் சிறந்த பேச்சாளர் சர்.ஏ. இராமசாமி முதலியார்.

தமிழ் இலக்கியங்களில் அளவற்ற பற்று கொண்ட அண்ணா, ஒரு முறை தமிழ் இலக்கியம் பாடத்தை உரக்க படித்துக் கொண்டிருந்தார். அவருடைய சிற்றன்னையான இராஜாமணி (தொத்தா) பக்கத்தில் வந்து “கண்ணு! உன்னை எவ்வளவு செலவழித்துப் படிக்க வைக்கிறோம், நாலு வார்த்தை இங்கிலீஷ் நீயும் படிக்க வேண்டும் என்பது தானே?” என்று கேட்டார். உடனே அதனைப் புரிந்து சிரித்துக் கொண்ட அண்ணா, “உனக்காக இங்கிலீஷ் படிக்கிறேன் என்று கூறிவிட்டு, சத்தம் போட்டு இங்கிலீஷ் பாடத்தைப் . பிறகு இரவு வெகு நேரம் ஆனதும், தொத்தா தூங்கிவிட்டார் என்று நினைத்து, மீண்டும் தமிழ் படத்தைப் படிக்க ஆரம்பித்தார். திடீரென்று திடுக்கிட்ட தொத்தா, “துரை!....நான் முழிச்சு இருக்கிற வரைக்கும் நீ இங்கிலீஷ் படித்தாய்.. இப்போது தமிழ் படிக்கிறாயே?” என்று ஒரு போலி மிரட்டல் குரலில் பேசிவிட்டு அருகில் அமர்ந்தார். “மன்னிச்சுக்கோ தொத்தா தமிழ் என்றால் எனக்கு அவ்வளவு ஆசை “என்று கூறிவிட்டு மீண்டும் தமிழ் ப்பாடம் படிக்க ஆரம்பித்தார். அண்ணா. சிற்றன்னை இராஜாமணி அம்மையாரும் சிரித்துக் கொண்டார்.

கவிஞர் **தமிழ்தாசன்** - கழகத் தீர்மானக் குழுத் தலைவர்



கல்லூரி காலத்தில் தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளில் புலமை பெற்றவராக இனிமையான நடையையும்,சொல் வளத்தையும் தனக்கென ஒரு தனிப் பாணியைக் கடைப்பிடித்து வந்தார். கல்லூரி நாள் தவிர வெளியில் நடைபெறும் பட்டிமன்றங்கள், விவாதங்களில் கலந்து கொள்பவராக இருந்ததால், மக்கள் கூட்டம் அவரது பேச்சைக் கேட்க நிரம்பி வழிந்தது. அது கண்டு கல்லூரிப் பேராசிரியர்கள் அவரைப் பாராட்டினார்கள் .

ஆங்கிலத்தில் பேசும் வல்லவராக திகழ்ந்த சர்.ஏ. இராமசாமி முதலியார், ஒரு முறை மேடையில் அவர் பேசிய ஆங்கிலப் பேச்சை, “யாராவது தமிழில் மொழி பெயர்க்க வருகிறீர்களா?” என்று அழைக்கப்பட்டார்கள். ஒருவரும் மேடை ஏறவில்லை; அப்போது சாதாரண வேட்டி, சொக்காயுடன் பேச்சைக் கேட்க வந்திருந்த மாணவரான அண்ணா, மேடை ஏறித் தான் செய்வதாகக் கூறினார். அவரைப் பார்த்த அனைவரும் இவரால் முடியுமா? என்று எள்ளி நகையாடிபடி நினைத்தார்கள். ஆனால், அனைவர் மத்தியில், வியக்கத்தக்க வகையில் மொழிபெயர்த்த அண்ணா, மேடையில் பேசிய இராமசாமி முதலியாரையே ஆட்கொண்டு விட்டார். அது முதல் சில நேரங்களில் சர்.ஏ. இராமசாமி பேசுகிறார் என்றால், அவருடைய ஆங்கிலப் பேச்சை அண்ணா தான் மொழி பெயர்த்து இருக்கிறார்!. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் அண்ணாவுக்கும் சிலை எடுக்கப்பட்டது. அந்தச் சிலையைத் திறந்து வைத்தவரே இராமசாமி முதலியார் தான்! “ஆங்கிலம் பேசுவதில் நீ தான் என் வாரிசு; நீ தான் என் குரு!” என்று ஒரு பெரும் ஆங்கில மேதையே அண்ணாவைப் பாராட்டிச் சொன்னார் எனில், அறிஞர் அண்ணா மாபெரும் மேதை அல்லவா?

அண்ணா சைனா பஜார் அருகில் உள்ள பச்சைப்பன் கல்லூரியில் சேர்ந்தார். பி.ஏ. ஆர்னர்ஸ் படித்துக் கொண்டிருந்தபோது அவருக்குப் பேராசிரியராக இருந்தவர்கள் இராஜசேகரன், கிருட்டிண மூர்த்தி ஆகியோர் ஆவார்கள். பி.ஏ. ஆனர்ஸ் வெற்றி பெற்ற பின் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். ஆனால் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக அப்படிப்பைத் தொடர முடியவில்லை என்பதால், அதனைக் கைவிட்டார்.

கல்லூரியில் அண்ணா எழுதிய ஆங்கிலக் கட்டுரை “மாஸ்கோ அணிவகுக்கலாம்” (MASCO MAY PARADE) என்பதாகும். முதன் முதலில் ஆங்கிலத்தில் எழுதி அதற்கான முதல் பரிசையும் பெற்றுச் சென்றவர் அண்ணா. அனைவரும் பாராட்டத் தக்க மிகச் சிறந்த கட்டுரையாக இன்றும் போடப்படுகிறது அது.

கல்லூரியில் இன்டர்மீடியட் படிக்கிற போது, ஆங்கில ஆசிரியர், ஒரு பொருளைப் பற்றி எழுதுமாறு மாணவர்களைக் கேட்டுக்கொண்டார். மாணவர்கள் எழுதிய கட்டுரைகளை திருத்த உட்கார்ந்த ஆங்கில ஆசிரியர், அண்ணாவின் கட்டுரையைப் பார்த்து வியந்து போய்விட்டார். அண்ணா அவ்வளவு ஆழமான கருத்துக்கள் கொண்ட ஆங்கிலக் கட்டுரை எழுதி இருப்பது கண்டு அயர்ந்து போனார். மறுநாள் அண்ணாவைத் தனியாக அழைத்து, “அண்ணாதுரை நீ எழுதிய கட்டுரையில் பல அரிய விஷயங்கள் இருக்கின்றன. எந்தப் புத்தகங்களைப் பார்த்து எழுதினாய்?” என்று கேட்டார் அண்ணா மிகவும் பணிவாக “சார். அந்தக் கட்டுரை எந்தப் புத்தகத்திலும் பார்த்து எழுதவில்லை; நானாவே என் சொந்தக் கருத்துக்களை கூறியிருக்கிறேன்” என்று வலியுறுத்தினார். “அண்ணாதுரை .. எதிர்காலத்தில் நீ ஒரு தலை சிறந்த எழுத்தாளராக வருவாய்!” என்று அன்றே வாழ்த்தினார் அந்த ஆங்கிலப் பேராசிரியர்.

பி.ஏ.ஆனர்ஸ் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் போது சென்னை இலயோலா கல்லூரி மண்டபத்தில், பொருளாதாரம் பற்றிய ஆங்கிலப் பேச்சுப் போட்டியில், முதன்முதலாக அண்ணா கலந்து கொண்டார். பலப் பேராசிரியர்களும், மாணவர்களும் பாராட்டிடும் வகையில் அண்ணா பேசி முதல் பரிசு பெற்றார்.

1935 ஆம் ஆண்டு சென்னை ஒய்.எம்.சி.ஏ. சார்பில் நடைபெற்ற “வார்தா கல்வித் திட்டம்” பற்றிய கருத்தரங்க விவாதத்தில் கலந்து கொண்ட அண்ணா, ஆங்கிலத்திலும், தமிழிலும் பேசி அனைவரையும் அசத்தினர். அந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், அண்ணா தன் சொல் வன்மையால் வியப்படையச் செய்த பெருமை பற்றி அடிக்கடி நினைவு கூர்ந்தார்.

பண்டிட் ஆனந்தம் சென்னையின் நடத்திய நூலகம், பல்கலைக்கழக நூலகம், செயிண்ட் சேவியர் தெருவில் உள்ள மாநகராட்சி நூலகம் ஆகியவற்றில் அண்ணா தனது நேரத்தைத் செலவழிப்பார் கல்லூரி படிப்பு முடிந்தவுடன், அரசியலில் புகழ் பெறும் காலம் வரை ஏராளமான நூல்கள் படிக்கின்ற அவருடைய ஓய்விடமாகக் கன்னிமாரா நூலகம் இருந்து வந்தது.

கல்லூரி நாள்களில் அண்ணாவை கவர்ந்தவர் இலண்டன் பேராசிரியர் லாஸ்கி. அவர் பேரால் உள்ள இலண்டன் கல்லூரியில் படித்துப் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தவர் பேராசிரியர் சி. டி. இராஜேஸ்வரன் .அவரிடம் நெருங்கிய பழகிய அண்ணா லஸ்கியின் கருத்துக்களை அறிந்து அவரின் மாணவன் என்ற பெருமைப்பட கூறிக் கொண்டார்.

ஒருநாள் ஆங்கிலப் பேரசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். எல்லா மாணவர்களும் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர். அண்ணா மட்டும் குறிப்பு எடுக்காமல் இருந்தார். அதைக் கண்ட பேரசிரியர், “நீ ஏன் குறிப்பிபெருக்கவில்லை?” என்று கோபத்துடன் கேட்க, அதற்கு அண்ணா, “நான் குறிப்பெடுப்பதை விரும்பாதவன்; குறிப்பு எழுதுவதையும் நான் வெறுப்பவன்..” என்று அடக்கமாகச் சொன்னார். ஆனால், ஆசிரியர் சின்னத்துடன் “நீ மிகுந்த கர்வம் பிடித்தவன்; என் பாடத்தை நீ அலட்சியப்படுத்துகிறாய்; இதன் விளைவைப்பின்னால்நீஉணர்வாய்...!” என்றார். அண்ணா மிகவும் மனம் வருந்தனார் . பாராட்ட வேண்டியவர் சினம் கொள்கிறாரே.....?” என்று அண்ணா வருந்தினார். இதற்கிடையில், இடைநிலை வகுப்பில் அண்ணா முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்தை அறிந்த அந்த ஆங்கிலப் பேராசிரியர் அண்ணாவை அழைத்து, அவருடைய நினைவாற்றலைப் பாராட்டி, சினம் கொண்டதற்குத் தானே முன்வந்து வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

நீதிக் கட்சியைச் சார்ந்தவர் தொழிலாளர்த் தலைவரான தோழர் பாசுதேவ் ஆவார். அவருக்கு ஆங்கிலம் மட்டுமே பேச வரும். தமிழில் பேச வராது என்பதால்; அவருடைய கருத்துகளை அறிந்து கொள்ள தமிழில் மொழிபெயர்ப்புச் செய்ய ஒருவர் வேண்டும். அதற்குரிய தகுதியான நபர் யார் என்று தேடிய போதுதான், கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அண்ணா மேல் கவனம் விழுந்தது. தோழர் பாசுதேவ் பேசும் கூட்டங்களில் அவருடைய ஆங்கிலப் பேச்சை மொழிபெயர்ப்புச் செய்ய ஒப்புக்கொண்டார் அண்ணா. தொடர்ந்து அவர் பேசும் கூட்டங்களில் அண்ணா கலந்து கொண்டார். பாசுதேவ் அவர்களின் ஆங்கிலப் பேச்சானது தொழிலாளர் மத்தியில்

அண்ணாவின் அழகிய ஆங்கில மொழி பெயர்ப்பால் அனைவரையும் கவர்ந்தது. கல்லூரி படிப்பை முடித்த பின்பு, அண்ணா நீதிக் கட்சியில் சேர்ந்தார் என்றால்; அதற்குக் காரணம் பாசுதேவ் என்பவரே ஆவார்.பிற்காலத்தில் தொழிலாளர் பிரதிநிதியாக அண்ணா ஜபல்பூரில் நடைபெற்ற தொழிற்சங்க மாநாட்டில் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் பேசிய அவருடைய அறிவு நடை பேச்சானது, அனைவரின் நெஞ்சங்களிலும் மாபெரும் தலைவராக உருவாவதற்கு இருக்கை போட்டு விட்டது.

அறிஞர் எம்.என். இராய் அவர்களின் அழைப்பின் பேரில், பெரியாருடன் அண்ணா வடநாட்டு சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுச் சில முக்கிய நகரங்களில் சொற்பொழிவு நிகழ்த்திடத்துணை நின்றார். அண்ணா பெரியாருடன் இலக்னோ (Lucknow University) பல்கலைக்கழகத்திற்குச் சென்று பெரியார் பேசிய தமிழ் பேச்சினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அங்கிருந்த மாணவர்கள் அண்ணாவின் ஆங்கில மொழி பெயர்ப்பைக் கேட்டு ஆரவாரம் செய்து இரசித்தார்கள். பின்னர் அண்ணாவை ஆங்கிலத்தில் பேசும் படி வற்புறுத்தினர். பெரியார் அனுமதி தராததால் அண்ணா பேச மறுத்தார். பெரியாரின் பேச்சை மொழி பெயர்க்கவே நான் வந்திருக்கிறேன் என்று தன் ஆசானின் சொல்லைத் தட்டாதவராக விளங்கியவர்.

ஒருமுறை பெரியார் அவர்கள் நிகழ்ச்சி தொடர்பாக ஒருவருக்கு தந்தி கொடுப்பதற்காக அண்ணாவை அழைத்து, “ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு விட்டது” என்று ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டு வாருங்கள் என்றார். அண்ணா அல்ரெடி டோல்டு (Already told) என்று எழுதி காட்டினார். பெரியார் ஆல்ரெடி டோல்ட் ஏன் இரு வார்த்தைகள்? தந்திக்காரன் இரண்டு வார்த்தைக்கும் கணக்கு போடுவாள்! செலவு எதற்கு? டோல் டேட்டு (tolded) என்று எழுதி அனுப்புங்கள் என்று சிக்கனம் கருதி சொன்னார். நின்றிருந்த அண்ணா இலக்கணப்படி தவறுதான் எனத் தெரிந்தும், பெரியார் கூறியபடியே மறுக்காமல் டோல்டேடு என்று எழுதி அனுப்பிவிட்டார். தன் தலைவரின் பேச்சைத் தட்டாதவர்தாம் அண்ணா. இப்படிப் பலச் சம்பவங்கள் உண்டு.

1940 -களில் வட இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டதந்தை பெரியார், மும்பை நகரில் டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார், முகமது அலி ஜின்னா (பின்னாளில் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஆனவர்) ஆகிய தலைவர்களைச் சந்தித்தார். அண்ணா எனத் தமிழ் மக்களால் பேரன்புடன் அழைக்கப்படும் தோழர் சி.என். அண்ணா துரை அப்போது பெரியாருடன் சென்றார். அவரின் தமிழ்ப் பேச்சுகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பெருமைப் பேறு அண்ணாவுக்கு உண்டு.

தொடர்ச்சி நாளை...